




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








Vol: 02 | Issue: 329 | 4 Pages | 24.6.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 329 | 4 பக்கங்கள் | 24.6.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**

**கொல்லாமை சூழும் நெறி**

**விளக்கம்:**

**நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.**

## ஜெகன் மோகன் ரெட்டி காரில் சிக்கி தொண்டர் உயிரிழப்பு: வீடியோ வெளியாகி அதிர்ச்சி



அமராவதி, ஜூன் 24

ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல்மந்திரி ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டியின் கார் கான்வாயில் ஏற்பட்ட விபத்தில், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ்கட்சிதொண்டர் ஒருவர்உயிரிழந்தசம்பவம் தொடர்பாக ஆந்திராவின் குண்டூர் மாவட்ட போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

முன்னதாக இந்த சம்பவம் கடந்த ஜூன் 18ம் தேதி அன்று குண்டூர் மாவட்டத்தில் உள்ள எடுகூரு கிராமத்திற்கு அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் நடந்துள்ளது.

ஜெகன்மோகன்ரெட்டி, பால்நாடு மாவட்டத்தில் உள்ள ரெண்டபல்லா கிராமத்தில் தற்கொலை செய்து கொண்ட ஒய்.எஸ்.ஆர்.சி.பி. தொண்டரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்காக பயணித்து கொண்டிருந்தார். அப்போது, அவரது கான்வாயைப் பின்தொடர்ந்த பெரும் கூட்டத்தில், செலி சிங்கையா (55) மலர்கள் தூவ முயன்றபோது தவறி விழுந்து, ஜெகனின் காரின் முன் வலது சக்கரத்தின் கீழ் சிக்கி உயிரிழந்தார்.

சிங்கையாவை போலீசாரும், ஒய்.எஸ்.ஆர்.சி.பி ஆதரவாளர்களும் அருகில் உள்ள மருத்துவமனைக்கும், பின்னர் குண்டூர் அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்றனர். ஆனால், அவர் வழியிலேயே இறந்துவிட்டதாக குண்டூர் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

முதலில், ஜெகன் கான்வாயில் ஒரு வாகனத்தில் ஏறி விழுந்ததால் சிங்கையா காயமடைந்ததாகக்கருதப்பட்டது, ஆனால், ஜெகன்பயணித்த வாகனத்தின் அடியில் அவர் நசுங்கிய வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வைரலாகின.

ஒய்.எஸ்.ஆர்.சி.பி. தலைவர்கள். சிங்கையாவின் குடும்பத்திற்கு 10 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

## ரஷியா, அமெரிக்காவிடம் கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரித்த இந்தியா

புதுடெல்லி, ஜூன் 24

உலகின் 3வது பெரிய எண்ணெய் இறக்குமதி மற்றும் நுகர்வு நாடான இந்தியா, வெளிநாடுகளில் இருந்து சுமார் 52 லட்சம் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. மத்திய கிழக்கில் இருந்து அதிக அளவு கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வந்த இந்தியா கடந்த 2022ம் ஆண்டில் உக்ரைன் ரஷியா போருக்கு பிறகு ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய தொடங்கியது.

சில ஐரோப்பிய நாடுகள் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை தவிர்த்த காரணத்தால் இந்தியாவுக்கு குறைந்த விலையில் ரஷியா வழங்கி வருகிறது. ரஷியாவிடம் கச்சா எண்ணெய் இறக்குமதியில் 1 சதவீதத்துக்கும் குறைவாக இருந்த நிலையில் குறுகிய காலத்தில் 44 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த மாதம் ரஷியாவில் இருந்து தினமும் 22 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது.

ஈராக், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், குவைத்தில் இருந்து வாங்கிய மொத்த அளவை விட இது அதிகம். கடந்த மாதத்தில் ரஷியாவில் இருந்து இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி ஒரு நாளைக்கு 19.6 லட்சம் பீப்பாய்கள் ஆகும். இந்த மாதத்தில் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி தினமும் 4 லட்சத்து 39 ஆயிரம் பீப்பாய்களாக உயர்ந்துள்ளது. இது முந்தைய மாதத்தில் வாங்கப்பட்ட ஒரு நாளைக்கு 2 லட்சத்து 80 ஆயிரத்து பீப்பாய்களை விட அதிகமாகும்.

இந்நிலையில் இஸ்ரேல் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் அதிகரித்து உள்ளது. 2 நாடுகளுக்கும் இடையிலான மோதல் அதிகரித்து வரும் நிலையில், எண்ணெய் ஏற்றுமதிக்கு முக்கிய போக்குவரத்து பாதையாக இருக்கும் ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அச்சுறுத்தியுள்ளது. இந்த பாதை வழியாகத்தான் இந்தியா தனது அனைத்து எண்ணெய், எரிவாயுவை இறக்குமதி செய்கிறது. மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதல் இதுவரை எண்ணெய் வினியோகத்தை பாதிக்கவில்லை என்றாலும், ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் கப்பல் உரிமையாளர்கள் வளைகுடாவுக்கு காலி டேங்கர்களை அனுப்ப தயங்குகிறார்கள்.

## பாகிஸ்தானுக்கு உளவு தகவல்களை அனுப்பிய ராணுவ வீரர் கைது




சண்டிகர், ஜூன் 24

பஹல்காம் தாக்குதல், இந்தியா பாகிஸ்தான் மோதலை தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே தற்போது அமைதி திரும்பியுள்ளது. இதனிடையே, மோதலை தொடர்ந்து இந்தியாவில் பாகிஸ்தானுக்கு உளவு தகவல்களை கொடுத்ததாக பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உடன் தொடர்பில் இருந்த பஞ்சாப்பை சேர்ந்த ராணுவ வீரரை போலீசார் கைது செய்துள்ளனர். பஞ்சாப்பின் அமிர்தசரசை சேர்ந்த ராணுவ வீரர் குர்பிரீத் சிங் ஜம்முவில் ராணுவ வீரராக பணியாற்றி வந்தார். அவர் 2016ம் ஆண்டு முதல் பாகிஸ்தானின் உளவு அமைப்புடன் தொடர்பில் இருந்துள்ளார். இந்திய ராணுவத்தின் ரகசிய தகவல்களை அவர் பாகிஸ்தானுக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து, குர்பிரீத் சிங்கை போலீசார் இன்று கைது செய்தனர். அதேபோல், அமர்தசரசை சேர்ந்த ஷலிக் மாஷி என்ற நபரையும் போலீசார் கைது செய்தனர். இவரும் பாகிஸ்தானுக்கு ரகசிய தகவல்களை கொடுத்துள்ளார். கைது செய்யப்பட்ட 2 பேரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# அரசு பணியிடங்களுக்கு தேர்வான 50 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கிய முதல்அமைச்சர்

சென்னை ஜூன் 24

தொழில் வணிகத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வான 50 பேருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (23.6.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தொழில் வணிகத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி ஒட்டுமொத்த சமூகபொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றன.




தொழில் வணிகத் துறையானது சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு திட்டங்கள், நிறுவனங்களை அமைக்க மற்றும் விரிவாக்கம் செய்வதற்கான மானியங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை தொழில்முனைவோரின் மூலம் தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வழங்கி பங்காற்றி வருகிறது. தொழில் வணிகத் துறை வாயிலாக கலைஞர் கைவினைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் போன்ற பல்வேறு சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தொழில் வணிகத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 19 இளநிலை உதவியாளர், 22 தட்டச்சர் மற்றும் 9 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் இன்றையதினம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் 1 உதவி கண்காணிப்பாளர். 11 உதவி இயக்குநர்கள் 18 உதவி பொறியாளர்கள் 47 உதவியாளர்கள் 34 இளநிலை உதவியாளர்கள், 41 தட்டச்சர்கள் மற்றும் 25 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய பணியிடங்களுக்கு மொத்தம் 177 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் .தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவை கரூர் எண்ணெய் குழாய் ஆகிய இரண்டு திட்டங்களையும் மத்திய மாநில அரசுகளை சாலை ஓரமாக அமைக்க கோரி தொடர் காத்திருப்பு போராட்டம்

பாரத் பெட்ரோலியத்தின் ஐடிபிஎல் எண்ணெய் குழாய் திட்டத்தை கோவை மாவட்டம் இருகூரிலிருந்து திருப்பூர் மாவட்டம் முத்தூர் வரையிலும் ஏற்கனவே 25 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கோவை கரூர் எண்ணெய் குழாய் ஆகிய இரண்டு திட்டங்களையும் மத்திய மாநில அரசுகளை சாலை ஓரமாக அமைக்க கோரி தொடர் காத்திருப்பு போராட்டம்





திருப்பூர் மாவட்டம் அன்புடையர் கடந்த 1999 ஆம் ஆண்டு petrontcck விவசாய நிலத்தில் கோவை முதல் கரூர் வரையிலான எண்ணெய் குழாய் திட்டத்தை அமைத்துள்ளது. இதனால் விவசாய நிலங்கள் துண்டாடப்பட்டுள்ளது. நிலத்தின் சந்தை மதிப்பு முழுமையாக சரிவடைந்துள்ளது. முழுமையாக விவசாயம் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. அரசு வங்கிகள்கூட நிலத்தை அடமானமாக வைத்து கடன் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஒட்டுமொத்தமாக நிலத்தின் மதிப்பை மட்டுமே நம்பியுள்ள எமது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதே பகுதியில் IDPL என்னை குழாய் திட்டத்தை செயல்படுத்துவ உள்ளதால் ஏற்கனவே வெந்து நொந்து கொண்டிருக்கும் விவாசயிகளுடைய மனது கடுமையாக வேதனை அடைந்துள்ளது. கடந்த 24.3.2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் திட்டத்து க்காக மக்கள் அல்ல மக்களுக்குத் தான் திட்டம் என்ற அரசு மொழியை முன்மொழிந்து தமிழ்நாட்டில் எண்ணெய் எரிக்காற்று குழாய் திட்டங்கள் அனைத்தும் சாலை வரமாக மட்டுமே அமல்படுத்தப்படும் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 340 கிலோமீட்டர்தூரத்திற்கு கையில் எரிக்காற்று குழாய் திட்டமும், 270 கிலோமீட்டர்தூரத்திற்கு IDPL என்னை குழாய் திட்டமும், 170கிலோமீட்டர் தூரத்திற்கு இந்தியன் ஆயில் எண்ணெய் குழாய் திட்டமும் சாலை ஓரமாக அமைக்கப்பட்டு வருகிறது. திமுக 2016,2019, 2021 ஆகிய மூன்று தேர்தல் அறிக்கையிலும் தேர்தல் பரப்புரையிலும் திமுக ஆட்சிக்கு வந்தால் திட்டம் சாலையோரமாக மட்டுமே அமைக்கப்படும் என்ற வாக்குறுதியும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு சாலை அமைத்து தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்து எங்களை ஏமாற்றி நிறுவனம் மீண்டும் மத்திய அரசிடம் வெளியே அனுமதி பெறாமல் பழைய அனுமதி வைத்துக் கொண்டு காவல்துறை பாதுகாப்போடு சித்தப்பா நீ நிறைவேற்ற முயற்சித்து வருகிறது. அதோடு இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் மூன்றாவது ஒரு எண்ணெய் குழாயை அமைப்பதற்கு திட்டமிட்டு மத்திய அரசிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது. இந்தக் கோரிக்கை வலியுறுத்தி 200 நாட்களைத் தாண்டி அந்த கிராமங்களில் நடந்து கொண்டிருக்கும் தொடர்திருப்பூர் போராட்டத்தை ஒரு இடத்தில் வைத்து மேற்கொண்டு நடத்துவதற்காக திட திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே மத்திய மாநில அரசுகளை மேற்கொண்டு இரண்டு திட்டங்களையும் சாலையோரமாக அமைக்க கோரி நடைபெற உள்ள தொடர் காத்திருப்பு போராட்டத்தில் அரசியல் கட்சி சாதி மதம் சார்பற்ற அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்ட விவசாயிகளும், அனைத்து விவசாய சங்க தலைவர்களும் நிர்வாகிகளும் அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகளும் பெருந்தலைவர் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். விவசாய சங்க தலைவர்களும் மற்றும்100 மேற்பட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## சாத்தான்குளம் தந்தைமகன் கொலை வழக்கு காவல் ஆய்வாளர் ஸ்ரீதரின் ஜாமீன் மனு தள்ளுபடி



மதுரை, ஜூன் 24

கடந்த 2020ம் ஆண்டு கொரோனா ஊரடங்கு கால கட்டத்தின்போது, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் போலீசார் விசாரணை என்ற பெயரில் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று கொடூரமாக தாக்கியதில் இருவரும் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த இரட்டைக் கொலை குறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கு தொடர்பாக அப்போதைய சாத்தான்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 10 போலீசார் கைது செய்யப்பட்டனர். இதில் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த வழக்கில் தொடர்புடைய ஏனைய அனைவரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த இரட்டைக்கொலை வழக்கு மதுரை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கில் சிறையில் உள்ள காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், தனக்கு ஜாமீன் கேட்டு மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது, வழக்கு விசாரணை முடியும் நிலையில் உள்ளது என்றும், மனுதாரருக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என்றும் சி.பி.ஐ. தரப்பில் வாதிடப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, ஸ்ரீதரின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## சென்னை கலைவாணர் அரங்கத்தில் என்.எஸ். கிருஷ்ணனின் சிலை

சென்னை ஜூன் 24

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் குடும்பத்தினரின் கோரிக்கையினை ஏற்று சென்னை, ஜி.என்.செட்டி தெருவில் அமைந்திருந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச்சிலை சென்னை, வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என்று முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நாகர்கோவில் அருகே ஒழுகினசேரியில் 29.11.1908 அன்று சுடலைமுத்துப்பிள்ளை, இசக்கி அம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். நாகர்கோவில் சுடலைமுத்துப்பிள்ளை கிருஷ்ணன் என்பதன் சுருக்கமே என். எஸ். கிருஷ்ணன் என்பதாகும்.

கலையுலக மாமேதை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தமிழ்த் திரையுலகத்தின் புகழ்பெற்ற நடிகர் ஆவார். நடிகர், பாடகர், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் எனப் பன்முக ஆற்றலைப் பெற்றவர்.

அறிவியல் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். ஏறத்தாழ 150 படங்களுக்கு மேல் நடித்துள்ள அவர் சீர்திருத்தக் கருத்துகளைத் திரைப்படங்களில் துணிவோடு எடுத்துக் கூறியவர். கலையுலகில் கருத்துகளை வழங்கியது போல் தமது வாழ்க்கையிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பணத்தை வாரி வழங்கியவர். காந்தியடிகளிடமும், காந்திய வழிகளிலும் பற்று மிகக் கொண்டவர்.

தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாடகருமான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் 1957 ஆகஸ்ட் 30 அன்று தனது 49வது வயதில் காலமானார். அன்னாருக்கு தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் பேரறிஞர் அண்ணாவால் 14.1.1969ம் ஆண்டு சென்னை ஜி.என். செட்டி தெரு, திருமலைப்பிள்ளை சாலை சந்திப்பில் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.




தினகனி

24.6.2025

# இலங்கைக்கு கடத்த முயன்ற 90 கிலோ கஞ்சா பறிமுதல்

ராமநாதபுரம், ஜூன் 24

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே அ.மணக்குடி ஓடக்கரை முனியய்யா கோவில் அருகே உள்ள கடற்கரை பகுதியில் நேற்று அதிகாலை கடலோர பாதுகாப்பு குழும போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் அய்யனார், கதிரவன் உள்ளிட்ட போலீசா்ா அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது கடற்கரை பகுதியில் சரக்கு வாகனத்துடன் நின்றிருந்த சிலர் போலீசாரை பார்த்ததும் தப்பி ஓட முயன்றனர்.

போலீசார் விரட்டிச் சென்று சரக்கு வாகனத்தின் டிரைவரை மடக்கி பிடித்தனர். மற்றவர்கள் தப்பி ஓடி விட்டனர். தொடர்ந்து அந்த சரக்கு வாகனத்தை போலீசார் சோதனை செய்தனர்.

அதில் 3 சாக்கு பைகளில் 90 கிலோ கஞ்சா பதுக்கி வைத்து இருந்தது தெரிய வந்தது.



தொடர்ந்து சரக்கு வாகனத்தை பறிமுதல் செய்த போலீசார், அதன் டிரைவரான புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகே உள்ள காரக்கோட்டை கிராமத்தை சேர்ந்த டிரைவர் ராஜமாணிக்கம் (வயது 61) என்பவரை கைது செய்தனர்.

இதுதொடர்பாக கடலோர பாதுகாப்பு குழும போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், படகு மூலம் இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரை பகுதிக்கு இந்த கஞ்சா பார்சல்கள் கொண்டு வரப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

# ஆபரேஷன் சிந்தூர்: இந்தியாவில் சிலருக்குப் பிரச்சினை அண்ணாமலை

மதுரை, ஜூன் 24

நேற்று நடந்த முருக பக்தர் மாநாட்டில் நயினார் நாகேந்திரன் பேசுகையில், "முருக பக்தர் மாநாட்டுக்கு எத்தனையோ தடைகள் வந்தன. எப்படியாவது இந்த மாநாட்டை தடுக்க வேண்டும் என்றும் பலர் நினைத்தார்கள். ஆனால் அதனை எல்லாம் மீறி முருகனின் ஆசியுடன் லட்சக்கணக்கானவர்கள் இந்த மாநாட்டில் கூடியுள்ளனர். நமது வாழ்வியலை இங்கே காண முடிகிறது. தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய அனைத்தும் ஒருமித்த கருத்துகளை கொண்டவை. இந்த கூட்டத்தில் பங்கேற்றதன் மூலமாக சொர்க்கபுரியில் இருப்பதாகவே உணர்கிறேன். ஒரு விதமான தெய்வீக உணர்வையும் இந்த மாநாடு ஏற்படுத்தி இருக்கிறது" என்று அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து முருக பக்தி பாடல்களையும், திருப்புகழ் பாடலையும் நயினார் நாகேந்திரன் பாடினார்.

முருக பக்தர் மாநாட்டில் தமிழக பா.ஜனதா முன்னாள் தலைவர் அண்ணாமலை பேசியதாவது:



தமிழகத்தில் 44 ஆயிரம் கோவில்கள் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் 344 கோவில்கள் ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை. இதில் எங்காவது அறநிலையத்துறை ஒழுக்கத்துடன் செயல்படுகிறதா?.

நம்முடைய முன்னோர்கள் கலாசாரம், பண்பாடு, கோவில்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய வாழ்வியல் முறையை பாதுகாத்து நம்மிடம் ஒப்படைத்தனர். அவர்களைப் போல நாமும் அவற்றை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டும். இதனை நாம் ஒரு கொள்கையாகவே இங்கிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த மாநாடு அரசியல் நோக்கத்திற்கானதல்ல. நமது வாழ்வியலை மீட்டு எடுத்து உள்ளது. மிகப்பெரிய வெற்றியை பெற்று இருக்கிறது. இனி முருக பக்தர்கள் மாநாட்டுக்கு முன்பு, பின்பு என்றுதான் அரசியல், வரலாறு இருக்கும்.

உலகம் முழுவதிலும் 230 கோடி கிறிஸ்தவர்களும், 200 கோடி இஸ்லாமியர்களும், 190 கோடி மக்கள் எந்த மதத்தையும் சாராதவர்களாகவும் இருக்கிறார்கள். 120 கோடி இந்து மக்கள் உலகம் முழுவதிலும் வசிக்கிறார்கள் 2050ம் ஆண்டில் முஸ்லிம்கள் பெருவாரியாக உலகம் முழுவதும் இருப்பார்கள் என்கிறது ஒரு ஆய்வு. அந்தவகையில் இந்துக்களின் மக்கள் தொகை குறையாத அளவிற்கு பார்த்துக் கொள்வது நம் கடமை.

உலக மக்கள் தொகையில் 0.2 சதவீதம் மக்கள்தொகை கொண்ட இஸ்ரேல் நாட்டினர், அண்டை நாடுகளான 4 நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்டு வருகின்றனர். பஹல்காமில் இந்து என்பதற்காகவே அப்பாவி மக்களை பயங்கரவாதிகள் கொன்றனர். இந்தியாவில் ஆபரேஷன் சிந்தூர் நடத்தப்பட்டதால் சிலருக்கு பிரச்சினை.

பள்ளி செல்லும் குழந்தைகள் தைரியமாக திருநீறு பூசி, ருத்ராட்சம் அணிந்து செல்ல வேண்டும். இந்த மாநாட்டில் கூடியுள்ள கூட்டம் பலருக்கு எச்சரிக்கை மணியாக அமைந்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

# நெல்லையில் பரபரப்பு: போலீஸ்காரருக்கு சரமாரி அரிவாள் வெட்டு மர்ம நபர்களுக்கு வலைவீச்சு



திருநெல்வேலி ஜூன் 24

நெல்லை பாளையங்கோட்டை வ.உ.சி மைதான வளாகத்தில் மாநகராட்சி சிறுவர் பூங்கா உள்ளது. வாரவிடுமுறை தினமான நேற்று இங்கு ஏராளமானவர்கள் குடும்பத்துடன் சென்றதால் கூட்டம் அலைமோதியது. இரவு 9 மணி அளவில் பூங்காவில் நின்ற சில இளைஞர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது.

அப்போது அங்கு குடும்பத்தினருடன் வந்த போலீஸ்காரரான மணிமுத்தாறு 9வது பட்டாலியனைச் சேர்ந்த முகமது ரஹ்மத்துல்லா (வயத 29) இளைஞர்களை தட்டிக் கேட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த கும்பல், போலீஸ்காரர் முகமது ரஹ்மத்துல்லவை அரிவாளால் சரமாரியாக வெட்டினர்.

இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப்பி சென்றது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பாளையங்கோட்டை போலீசார், பூங்காவுக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இதற்கிடையே போலீஸ்காரர் முகமது ரஹ்மத்துல்லாவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து பாளையங்கோட்டை போலீசார் விசாரணை நடத்தி, தப்பி ஓடியவர்களை வலை வீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தி.மு.க. கூட்டணி உடையும் என அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் பகல் கனவு காண்கிறது செல்வப்பெருந்தகை



கோயம்புத்தூர் ஜூன் 24

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் 'இந்தியா' கூட்டணி வலிமையாக, வலுவாக இருக்கிறது. மத்திய மந்திரி எல்.முருகன் மற்றும் பா.ஜ.க.வினர் கூறுவது போன்று எங்கள் கூட்டணியில் எந்தவித ஓட்டையும் இல்லை. எங்கள் கூட்டணியில் ஏதாவது குழப்பம் ஏற்படும், சிதறும், அதனால் தங்களுக்கு

ஆதாயம் ஏற்படும் என அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் பகல் கனவு காண்கிறார்கள். எங்கள் கூட்டணியில் எந்தவித குழப்பமும் ஏற்படாது. எங்கள் கூட்டணி சிதறுவதற்கு நெல்லிக்காய் மூட்டை கிடையாது. இந்த கூட்டணி இரும்பு கோட்டை.

எங்கள் கூட்டணிக்குள் சிறு, சிறு பிரச்சினைகள் இருக்கலாம். அதனை எல்லாம் நாங்களே பேசி தீர்த்து கொள்வோம். தமிழகத்தில் யாரெல்லாம் பாசிச சக்தியோடு இணைந்து இருக்கிறார்களோ, அவர்களை தமிழக மக்கள் புறக்கணிப்பார்கள்.

தமிழகத்தில் முருகன் மாநாடு நடத்த வேண்டியதற்கான அவசியம் என்ன? எதற்காக நடத்துகிறார்கள்? அயோத்தியில் ராமரை நாடினார்கள். ஆனால் அங்கு பா.ஜ.க.வை ராமர் கைவிட்டு விட்டார். பா.ஜ.க. கட்சி மக்களை நம்பி இல்லை. மதத்தை வைத்து அரசியல் செய்வதுதான் அதன் வேலை.

இவ்வாறு அவர் கூறினார்.

# குடும்பத் தகராறில் சலூன் கடைக்காரர் தூக்குப்போட்டு தற்கொலை

தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி, மாப்பிள்ளையூரணியைச் சேர்ந்த சக்திவேல் மகன் முனீஸ்வரன் (வயது 34), ஆ.சண்முகபுரத்தில் சலூன் கடை நடத்தி வந்தார். இவருக்கு திருமணமாகி மனைவியும் 2 ஆண் குழந்தைகளும் உள்ளனர். முனீஸ்வரன் அடிக்கடி குடித்துவிட்டு வீட்டிற்கு வருவாராம் இதனால் குடும்பத்தில் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று இரவு முனீஸ்வரன் மது குடித்துவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார். இதனால் மனைவி அவரை




கண்டித்துள்ளார். இதையடுத்து குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மன வேதனையடைந்த முனீஸ்வரன் தனது படுக்கையறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதுகுறித்து தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

# மதுரை முருக பக்தர்கள் மாநாட்டில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றம்

மதுரை ஜூன் 24

மதுரை பாண்டிகோவில் அம்மா திடலில் இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்று வருகிறது. திருப்பரங்குன்றம் மலை, கோவில் பின்னணியில் இருப்பது போன்று இந்த மாநாட்டுக்கு மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேடையில் அறுபடை வீடுகளின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு நடுவில் முருகப்பெருமான் வேலுடன் நிற்கும் பிரமாண்ட சிலை போன்ற வடிவமைப்பும் இடம் பெற்றுள்ளது.

முருக பக்தர்கள் மாநாட்டில் ஆந்திர துணை முதல் மந்திரி பவன் கல்யாண், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், அண்ணாமலை உள்ளிட்டோர்கலந்துகொண்டனர். இந்த நிலையில் இந்த முருக பக்தர்கள் மாநாட்டில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த தீர்மானங்கள் வருமாறு:



1. திருப்பரங்குன்றம் மலை மீது கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும்.

2. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த பிரதமர் மோடிக்கு பாராட்டுகள்.

3. திருப்பரங்குன்றம் மலை குமரனுக்கே சொந்தம் என முருகன் மலைகளை காக்க வேண்டும்.

4. தமிழகத்தில் உள்ள கோவில்களில் இருந்து இந்த சமய அறநிலையத்துறை வெளியேற வேண்டும்.

5. தேர்தல்களில் இந்துக்கள் ஒற்றுமையாக இருந்து இந்துக்களின் வாக்கு வங்கியை நிரூபிக்க வேண்டும்.

6. சஷ்டி தினத்தன்று சஷ்டி கவசத்தை ஒன்று சேர்ந்து பாட வேண்டும்.

# திருச்செந்தூர் கோவில் உண்டியல் மூலம் ரூ.2.59 கோடி பணம், 1½ கிலோ தங்கம், 17 கிலோ வெள்ளி வருவாய்

தூத்துக்குடி ஜூன் 24

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் உண்டியல் வருமானம் மாதந்தோறும் எண்ணப்படுகிறது. இந்த மாதம் 2வது முறையாக நேற்று முன்தினம் உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டது. கோவில் வளாகத்தில் தக்கார் அருள்முருகன் தலைமையில், இணை ஆணையர் ஞானசேகரன் முன்னிலையில் எண்ணும் பணி நடந்தது.

கோவில் முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், தென்காசி உதவி ஆணையர் செந்தில்குமார், கோவில் உதவி ஆணையர் நாகவேல், கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, தக்காரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ்பாண்டியன், பொதுமக்கள் பிரதிநிதிகள் வேலாண்டி, மோகன்,



சுப்பிரமணியன், கருப்பன் மற்றும் சிவகாசி பதினெண் சித்தர் மடம் குருகுல வேத பாடசாலை உழவாரபணிக்குழுவினர் மற்றும் கோவில் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

இந்த உண்டியல் எண்ணிக்கையில் மொத்தம் ரூ.2 கோடியே 59 லட்சத்து 32 ஆயிரத்து 514 பணம் கிடைத்துள்ளது. அதே போல் 1 கிலோ 515 கிராம் தங்கமும், 17 கிலோ 96 கிராம் வெள்ளியும், 883 வெளிநாட்டு கரன்சிகளும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

# கோவில்பட்டியில் வாலிபரை அரிவாளால் தாக்கி கொலை மிரட்டல்: 5 பேர் கைது




தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, வீரவாஞ்சிநகா் 9ஆவது தெருவைச் சோ்ந்த சந்திரசேகரன் மகன் பிரவீன்குமாா் (வயது 30). தொழிலாளியான இவா் நேற்று, கோவில்பட்டி நாலாட்டின்புதூா் சாலை பகுதியில் காரிலிருந்தபடி லாட்டரிச் சீட்டு விற்றவா்களிடம் ரூ.100 கொடுத்து லாட்டரிச் சீட்டு வாங்கிவிட்டு, எப்போது குலுக்கல் எனக் கேட்டாராம். இது தொடா்பான தகராறில் அந்தக் கும்பல் அரிவாளால் தாக்க முயன்றதில், பிரவீன்குமாரின் முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது. தொடா்ந்து அந்தக் கும்பல் அரிவாள், கத்தியால் தாக்க முயன்றதால், அவா் பைக்கில் ஏறி ஒரு தனியார் ஆலை மேம்பாலம் அருகே இறங்கி, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். இதனையடுத்து அவர் அளித்த புகாரின்பேரில், கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில் தடை செய்யப்பட்ட லாட்டரிச்சீட்டுகள் விற்றதுடன், வாலிபரைத் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக மதுரை மாவட்டம், ராமையா நகா் பாா்க் டவுனைச் சோ்ந்த இசக்கிமுத்து மகன் சுப்பையா(38), தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே சிவலாா்குளம் அம்மன் கோயில் தெரு நிறைகுளத்தான் மகன் சுபாஷ்(27), தூத்துக்குடி அண்ணாநகா் சுகுமாா் மகன் செந்தில்(38), அண்ணாநகா் 10வது தெரு சண்முகசாமி மகன் நாராயணசாமி(38), சென்னை மேற்கு சைதாப்பேட்டை விஜிபி சாலையைச் சோ்ந்த லட்சுமிகாந்தன் மகன் கிஷோா்(27) ஆகிய 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

# திருச்செந்தூர் கோவில் கும்பாபிஷேக விழாவில் அன்னதானம் வழங்க விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் இளம்பகவத் தகவல்

தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேகம் வருகிற 7ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு அன்னதானம் வழங்க விரும்பும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் www.foscos.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனுமதிக்கபட்ட இடங்களில் மட்டும் அன்னதானம் வழங்க வேண்டும்.

அன்னதானம் வழங்க விரும்புவோர் கோரம்பள்ளம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மைத்துறை கட்டிடத்தில் இயங்கும் உணவு பாதுகாப்புதுறை, மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அளித்து உணவு பாதுகாப்பு துறையின் பதிவுச் சான்றிதல் பெற வேண்டும்.

அதற்கு பாஸ்போர்ட் அளவு புகைப்படம், முகவரி தெரிவிக்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சான்று நகல் ஆகிய விவரங்களை அளிக்க வேண்டும். அன்னதானம் வழங்குவோர்கள் தங்கள் சார்ந்தவர்களின் விவரத்தினை ஆதார் அட்டை நகலுடன் சமர்பிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டுமே அன்னதானம் அளிக்க வேண்டும். அதுபோல் அனுமதி அளிக்கப்பட்ட நாள், நேரத்தில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். அனு



மதி பெறாமல் அன்னதானம் வழங்க கூடாது.

கோவில் வளாக பாதையில் பக்தர்களுக்கு இடையூறு இல்லாமல் பாதையிலிருந்து 100 மீட்டர் தள்ளி அன்னதானம் வழங்க வேண்டும். மேலும் நோய்தொற்று உள்ளவர்களை அன்னதானம் சமைக்கவோ மற்றும் வழங்கவோ அனுமதிக்ககூடாது. வாழை இலையில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். உணவு பொருட்கள் தரமானதாகவும், தூய்மைதானதாகவும் மற்றும் கலப்படம் இல்லாமலும் இருக்க வேண்டும்.

பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு அன்னதானம் வழங்கக்கூடாது. உணவு கழிவு பொருட்களை போடுவதற்கு ஏதுவாக குப்பை தொட்டிகளை ஏற்பாடு செய்து அன்னதானம் அளிப்பவர்களே உணவு கழிவுகளை சேகரித்து அகற்ற வேண்டும். அன்னதானம் வழங்குமிடத்தை சுத்தம் செய்து விட்டு செல்ல வேண்டும். மேலும் போதிய வழிக்காட்டு முறைகளை பின்பற்றாதவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தொடர்புக்கு 04612900669, 9894301986, 9629147886 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கிண்டியில் 118 ஏக்கரில் தோட்டக்கலை பூங்கா டெண்டர் கோரியது தமிழக அரசு




சென்னை ஜூன் 24

சென்னை கிண்டி ரேஸ் கிளப் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம் மீட்கப்பட்ட நிலையில், அதில் பொது மக்களுடைய பயன்பாட்டுக்காக பிரமாண்ட பூங்கா அமைக்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. 4,832 கோடி மதிப்பிலான 118 ஏக்கர் நிலம் தோட்டக்கலை நிலம் மாற்ற முறையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் இந்த முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது.

நகரமயமாக்கல், பெருகிவரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு நிலத்தில் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு தொடங்கியிருக்கிறது. அதன்படி சென்னை கிண்டி ரேஸ் கிளப்பில் இருந்து மீட்கப்பட்ட 118 ஏக்கர் நிலத்தில் பசுமை பூங்கா அமைப்பதற்கான விரிவானதிட்டஅறிக்கை மற்றும் வடிவமைப்பு தயார் செய்வதற்கு தமிழக அரசினுடைய தோட்டக்கலை துறை டெண்டர் கோரி இருக்கிறது.

இந்த பசுமைப் பூங்காவில் மலர் படுகைகள், மலர் சுரங்கப்பாதை, வண்ணத்துப்பூச்சி தோட்டம் உள்ளிட்ட 25 வகையான வசதிகள் உருவாக்க தமிழக அரசு திட்டமிட்டு இருக்கிறது.

# தூத்துக்குடி: பைக் விபத்தில் கிராம நிர்வாக அதிகாரி பலி

தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி, ஆசிரியர் காலனி 6வது தெருவைச் சேர்ந்த கருப்பசாமி மகன் வேலுச்சாமி (வயது 65), கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து கடந்த 2017ம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் கடந்த 19ம்தேதி காலை தனது சொந்த ஊரான கயத்தார் தெற்கு மயிலோடை கிராமத்திற்கு சென்று உறவினர்களை பார்த்துவிட்டு, இரவு தனது மோட்டார் பைக்கில் தூத்துக்குடிக்கு சென்று கொண்டிருந்தார். தூத்துக்குடி புதிய துறைமுகம் மதுரை பைபாஸ் ரோட்டில் மடத்தூர் அருகே வந்து கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்த டிப்பர் லாரியின் பின்னால் இவரது பைக் மோதியது. இவ்விபத்தில் பலத்த காயம் அடைந்த அவரை



108 ஆம்புலன்ஸ் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர் அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இதுகுறித்து சிப்காட் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சைரஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தார். மேலும் லாரியை சாலையோரத்தில் நிறுத்திய டிரைவர், ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகிலுள்ள பெருநாழி ஊரைச் சேர்ந்த தர்மர்(25) என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்.

# ஆட்டோ, கார், லாரி கண்ணாடிகள் உடைப்பு: வாலிபர் கைது

தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி, பிரையன்ட்நகர் 11வது தெருவை சேர்ந்த சரவணன் மகன் இசக்கி (வயது 26), சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 19ம்தேதி இரவு கட்டபொம்மன்நகரில் சாலையோரத்தில் ஆட்டோவை நிறுத்தியுள்ளார். அதே இடத்தில் இவரது உறவினரான சரவணகுமார் தனது காரையும், ஜெயராமன் என்பவர் தனது லாரியையும் நிறுத்தி இருந்தனர். நள்ளிரவில் ஒரு வாலிபர் சாலையோரத்தில் நிறுத்தியிருந்த ஆட்டோ, லாரி மற்றும் கார் ஆகியவற்றின் முன் பக்க கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளார். இதில் ரூ.40 ஆயிரம் மதிப்பில் சேதம் ஏற்பட்டது. இது குறித்து இசக்கி அளித்த புகாரின் பேரில் தென்பாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, பிரையன்ட்நகர் 11வது தெருவை சேர்ந்த முருகேசன் மகன் ஆகாஷ்(23) என்பவரை கைது செய்தனர்.

# வாலிபரை கட்டையால் தாக்கிய அண்ணன், தம்பி கைது

தூத்துக்குடி, ஜூன் 24

தூத்துக்குடி, மேலசண்முகபுரம், வண்ணார் 2வது தெருவைச் சேர்ந்த சரவணன் மகன் கார்த்திக்குமார் (வயது 25). இவர் ஒரு பெண்ணிடம் பேசியதை வண்ணார் 3வது தெருவை சேர்ந்த சங்கர் மகன்கள் செல்வகுமார்(27), சேர்மகுமார்(25) ஆகிய 2 பேரும் கண்டித்துள்ளனர். இதனால்இவர்கள்இடையே முன்விரோதம் இருந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தன்று அண்ணன் தம்பி 2 பேரும் சேர்ந்து கார்த்திக்குமாரை கட்டையால் தாக்கியுள்ளனர்.

இதில் காயமடைந்த அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதுகுறித்து தென்பாகம் காவல் நிலையத்தில் அவர் அளித்த புகாரின் பேரில், சப்இன்ஸ்பெக்டர் காவுராஜன் வழக்குப்பதிவு செய்து, செல்வகுமார் மற்றும் சேர்மகுமார் ஆகிய 2 பேரையும் கைது செய்து விசாரணை செய்தார்.

# பழுதான செல்போன் விற்றவர் நுகர்வோருக்கு ரூ.38,055 வழங்க தூத்துக்குடி நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு

தூத்துக்குடி ஜூன் 24

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த கீதா என்பவர் கோவில்பட்டியிலுள்ள மொபைல் கடையில் ரூ.3,055 மதிப்புள்ள செல்போன் ஒன்று வாங்கியுள்ளார். வாங்கிய ஒரு வாரத்திற்குள்ளாகவே மொபைல் வேலை செய்யாததால் கடைக்காரரிடம் சரி செய்ய கொடுத்துள்ளார். இது வெறும் சிறிய பிரச்சினைதான். உடனடியாக சரி செய்து தருகிறோம் என்று சொல்லி சரி செய்து கொடுத்து விட்டார்கள். ஆனால் மீண்டும் செல்போன் சரியாக வேலை செய்யாததால் அவர் கடைக்காரரை அணுகியுள்ளார். மீண்டும் அதே பிரச்சினை ஏற்பட்டதால் மன உளைச்சலுக்கு ஆளான கீதா தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த தூத்துக்குடி மாவட்ட




நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் திருநீலபிரசாத், உறுப்பினர்கள் சங்கர், நமச்சிவாயம் ஆகியோர் மொபைல் கடையின் சேவை குறைபாட்டினைசுட்டிக்காட்டி பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு பழுதான மொபைலின் விலையான ரூ.3,055 மற்றும் ரூ.30,000 நஷ்ட ஈடு மற்றும் வழக்கு செலவு தொகை ரூ.5,000 ஆக மொத்தம் ரூ.38,055ஐ இரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டும்.

இல்லையென்றால் அத்தொகையை செலுத்தும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் வட்டியுடன் வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# காதல் தோல்வியால் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் தற்கொலை

சென்னை ஜூன் 24

சென்னை பெரியமேடு,நடேசன்தெருவை சேர்ந்தவர் கோமதி (45 வயது). இவருடைய கணவர் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டார். கோமதி தனது ஒரே மகன் முனிசுடன் (17 வயது) தனியாக வசித்து வந்தார். முனிஷ், புளியந்தோப்பில் உள்ள ஒரு தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வந்தார். மேலும், அவர் சரியாக கல்லூரிக்கு செல்லாமல் நண்பர்களுடன்சுற்றி வந்ததாக கூறப்படுகிறது.

முனிஷ், ஒரு பெண்ணை காதலித்து வந்ததாககூறப்படுகிறது. இருவரும் பல மணி நேரம் செல்போனில் பேசி வந்துள்ளனர். திடீரென காதல் ஜோடிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதால் இருவரும் பிரிந்து விட்டனர். இதனால், முனிஷ் மன வேதனையுடன் தனியாக சுற்றி வந்தார்.

தாய் கோமதி வீட்டில் இல்லாத நேரத்தில் முனிஷ், வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து பெரியமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். காதல் தோல்வியால் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தாயின் கள்ளக்காதலனால் 16வயது சிறுமிக்கு நேர்ந்த விபரீதம்


அரியலூர், ஜூன் 24

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள சி.அரசூர் கிராமத்தை சேர்ந்த கனகராஜின் மகன் ஜெய்சங்கர் (வயது 34). கூலி தொழிலாளி. இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் ஜெய்சங்கர் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதிக்கு வேலைக்கு வந்துள்ளார்.

அப்போது திருமணமாகி கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுடன் அவருக்கு கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. அந்தப் பெண்ணிற்கு ஏற்கனவே 2 மகள்கள் உள்ளனர். ஜெய்சங்கர் அந்த பெண்ணுடன் குடும்பம் நடத்திய நிலையில், அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்துள்ளது.

இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த அந்த பெண்ணின் மகளான 16 வயது சிறுமியை ஜெய்சங்கர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனால் அந்த சிறுமி





கர்ப்பமானார். இதையடுத்து அவரை பிரசவத்திற்காக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு டாக்டர்கள், ஆவணத்திற்காக பெயர் மற்றும் முகவரியை பதிவு செய்தபோது 18 வயது நிரம்பாத சிறுமி என்பது தெரிய வந்தது.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் சார்பில் ஜெயங்கொண்டம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் போக்சோசட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து, ஜெய்சங்கரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 7ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை; தையல் கடைக்காரர் போக்சோவில் கைது

கடையம், ஜூன் 24

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள மயிலப்புரம் வடக்கு தெருவைச் சேர்ந்தவர் முருகன் (வயது 68). இவர் தையல் கடை நடத்தி வருகிறார்.

இவர் 12 வயதான 7ம் வகுப்பு மாணவிக்கு அடிக்கடி பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனால் மாணவியின் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தனக்குநேர்ந்தகொடுமை குறித்து மாணவி டியூசனுக்கு சென்றபோது சக மாணவிகளிடம் கூறியுள்ளார்.

உடனே அவர்கள் மாணவியின் பெற்றோரிடம் இது குறித்து கூறியுள்ளனர்.

இதனை அறிந்த சிறுமியின்பெற்றோர், ஆலங்குளம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

அதன்பேரில், போலீசார்போக்சோசட்டத்தில் வழக்குப்பதிவு செய்து முருகனை கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நிதி நிறுவன அதிபர் கொலை வழக்கில் 2 பெண்கள் உட்பட 3 பேர் கைது

திண்டுக்கல், ஜூன் 24

திண்டுக்கல் மாவட்டம் பழனி பைபாஸ் ராமையன்பட்டி அருகே தரைப்பாலத்தின்அருகே சில தினங்களுக்கு முன்பு கயிற்றால் கட்டப்பட்ட அட்டைப்பெட்டியில் கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில் ரத்த காயங்களுடன் ஆண் சடலம் இருந்தது.

தகவல் அறிந்து நிகழ்விடத்திற்கு விரைந்து சென்ற தாலுகா போலீசார் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்தனர்.

இதுகுறித்து மாவட்ட எஸ்பி.பிரதீப் உத்தரவின் பேரில் புறநகர் டிஎஸ்பி சிபிசாய் சௌந்தர்யன் மேற்பார்வையில் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் சார்பு ஆய்வாளர்கள்

அங்கமுத்து, கிருஷ்ணவேணி, பாலசுப்ரமணியன் மற்றும் காவலர்கள் கொண்ட தனிப்படையினர் அப்பகுதிகளில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டனர் விசாரணையில் கொலை செய்யப்பட்ட நபர் ஆர்த்தி தியேட்டர் ரோடு வ உ சி நகர் பகுதியை சேர்ந்த குபேந்திரன்(58) என்றும் அப்பகுதியில் நிதி நிறுவனம் நடத்தி வந்ததும் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி கொலை சம்பவத்தில் ஈடுபட்ட N.S.நகர், முனியப்பன் கோவில் தெரு பகுதியை சேர்ந்த பரமசிவம் மகன் கண்ணன்(54), கோபால்பட்டி, V. குரும்பபட்டியை சேர்ந்த கண்ணன் மனைவி சாந்தி(59), திருப்பூர், அவிநாசி மடத்துப்பாளையம்பகுதியைசேர்ந்த சுரேந்தர் மனைவி பிரியா(26) ஆகிய 3 பேரை கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட தகராறில் இவர்கள் மூவரும் குபேந்திரன் தள்ளி விட்டதாகவும் அதில் குபேந்திரன் கீழே விழுந்து இறந்து விட்டதால் அவரை அட்டைப் பெட்டியில் வைத்து ராமையன்பட்டி, தரைப் பாலம் அருகே வீசி சென்றதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது இதனைத் தொடர்ந்து போலீசார் கொலைக்கு பயன்படுத்திய குட்டியானை வாகனத்தை பறிமுதல் செய்து 3 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# ஈரோடு: ஓடும் ரெயிலில் பெண்ணிடம் 4½ பவுன் நகை பறிப்பு

ஈரோடு, ஜூன் 24

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியை சேர்ந்தவர் சண்முகசுந்தரம். இவருடைய மனைவி துளசிமணி. இவர்கள் தங்களது உறவினர்கள் சிலருடன் சேர்ந்து திருப்பதிக்கு ரெயிலில் சென்றனர். பின்னர் அவர்கள் சம்பவத்தன்று சொந்த ஊருக்கு திருப்பதி கோவை எக்ஸ்பிரஸ் ரெயிலில் திரும்பினர். அந்த ரெயில் சேலத்தை கடந்து ஈரோடு நோக்கி வந்து கொண்டு இருந்தது. அப்போது துளசிமணி ஜன்னல் ஓரமாக தூங்கி கொண்டு இருந்தார்.

காவிரி ஆற்றுப்பாலத்தை கடந்து ரெயில் மெதுவாக வந்து கொண்டு இருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி துளசிமணி கழுத்தில் அணிந்திருந்த 4½ பவுன் நகையை மர்ம நபர் பறித்துவிட்டு தப்



பிச்சென்றார்.

திடுக்கிட்டு எழுந்த துளசிமணி "திருடன்... திருடன்..." என்று கூச்சலிட்டார். இதனால் சக பயணிகளும் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து ரெயில் ஈரோட்டை சென்றடைந்தது. இதுகுறித்து ஈரோடு ரெயில்வே போலீசில் துளசிமணி புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, நகையை பறித்த மர்மநபரை வலைவீசி தேடி வருகின்றனர். ஓடும் ரெயிலில் பெண்ணிடம் 4½ பவுன் நகையை மர்மநபர் பறித்துவிட்டு தப்பிய துணிகர சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மனைவியை உயிரோடு எரித்துக்கொன்ற தொழிலாளி... குடும்ப தகராறில் விபரீதம்



விருதுநகர், ஜூன் 24

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி செட்டியார் தெருவை சேர்ந்தவர் நாகேந்திரன் (வயது 60). கூலி தொழிலாளி. இவருடைய மனைவி கஸ்தூரி (52). இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டது.

இந்தநிலையில் நேற்று இவர்களுக்கு இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த நாகேந்திரன், வீட்டில் இருந்த பெட்ரோலை எடுத்து கஸ்தூரி மீது ஊற்றி தீவைத்தார். அப்போது, தீ பரவி கஸ்தூரி அலறினார்.

கஸ்தூரி மீது ஊற்றிய பெட்ரோல் நாகேந்திரன் மீதும் பட்டது. அவர் மீதும் தீப்பற்றியது. உடனே அவர் வீட்டின் மேல் மாடியில் இருந்து கீழே குதித்தார். இதில் அவர் படுகாயத்துடன் கிடந்தார்.

உயிரோடு கஸ்தூரி கொளுத்தப்பட்டதை அறிந்து அக்கம்பக்கத்தினர் ஓடிவந்தனர்.

அதற்குள் கஸ்தூரி உடல் கருகி பிணமாக கிடந்தார். இதுகுறித்து அப்பகுதி மக்கள் காரியாபட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் நாகேந்திரனை மீட்டு விருதுநகர் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கஸ்தூரியின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுகுறித்து காரியாபட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தனியார் கல்லூரியின் 3வது மாடியில் இருந்து குதித்து மாணவி தற்கொலை

கள்ளக்குறிச்சி ஜூன்24

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே பழங்கூர் கிராமத்தை சேர்ந்தவர் ஏழுமலை. இவரது மகள் தீனதிரிஷா (வயது 19). இவர் விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூரில் உள்ள விழுப்புரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தனியார் மகளிர் கலைக்கல்லூரியில் பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் 2ம் ஆண்டு படித்து வந்தார்.

வழக்கம்போல் வீட்டில் இருந்து தீனதிரிஷா கல்லூரிக்கு சென்றார். உணவு இடைவேளையின்போது மதியம் 12.50 மணிக்கு அவர் கல்லூரியின் 3வது மாடிக்கு சென்றார். அப்போது அவர் திடீரென அங்கிருந்து கீழே குதித்தார். இதில் பலத்த காயமடைந்த தீனதிரிஷா சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக இறந்தார். இதைபார்த்த சக மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் அதிர்ச்சி அடைந்து கதறி அழுதனர்.

இது குறித்த தகவலின் பேரில் அரகண்டநல்லூர் இன்ஸ்பெக்டர் பிரேம் ஆனந்த், சப்இன்ஸ்பெக்டர் தேவரத்தினம் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தற்கொலை செய்து கொண்ட



மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் மாணவி தீனதிரிஷாவுக்கு உடல் நிலை பாதிப்பு இருந்து வந்துள்ளது. இதற்காக மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இருப்பினும் உடல் நிலை சரியாகவில்லை என கூறப்படுகிறது. இதில் மனமுடைந்த மாணவி கல்லூரியின் 3வது மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டது தெரிந்தது. தொடர்ந்து இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# குணா குகையில் 'ரீல்ஸ்' மோகத்தால் அத்துமீறும் இளைஞர்கள் வனத்துறை அதிரடி நடவடிக்கை



திண்டுக்கல், ஜூன் 24

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சர்வதேச சுற்றுலா தலமான கொடைக்கானலில், வனத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மோயர்பாயிண்ட், பைன் மரக்காடுகள், குணா குகை, தூண் பாறை போன்ற இடங்களில் பல்வேறு சினிமா படப்பிடிப்புகள் நடத்தப்பட்டு உள்ளன.

அதில் 'பேய்களின் சமையலறை' என்று அழைக்கப்பட்டு வந்த குகை, கமல்ஹாசன் நடித்த 'குணா' திரைப்படம் மூலம் பிரபலம் அடைந்து 'குணா குகை' என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்த குணா குகையில் பாறைகளுக்கு இடையே ஆபத்துகள் நிறைந்த பகுதியில் தவறி விழுந்து இதுவரை சுற்றுலா பயணிகள் பலர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், கடந்த ஆண்டு வெளியான 'மஞ்சுமெல் பாய்ஸ்' மலையாள திரைப்படத்தை பார்த்த பிறகு குணா குகைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது. பலர் அங்கு சென்று 'ரீல்ஸ்' வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டனர். இதனால் அங்கு எதிர்பாராத அசம்பாவிதம் ஏற்படக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது.

இதனைதடுப்பதற்காக 'குணா குகை' பகுதிக்கு சுற்றுலா பயணிகள் செல்வதை தடுப்பதற்காக வனத்துறையினர் இரும்பு வேலி அமைத்துள்ளனர்.

இருப்பினும் சில இளைஞர்கள் ரீல்ஸ் மோகத்தால் நுழைவுக் கம்பியை தாண்டி அத்துமீறி உள்ளே செல்கின்றனர். இது குறித்து புகார் எழுந்த நிலையில், வனத்துறையினர் இது தொடர்பாக அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர். குணா குகை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு கம்பிகளில், கூடுதலாக இரும்பு வலைகளும், சில இடங்களில் கூடுதல் கம்பிகளும் இணைக்கப்பட்டு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

24.6.2025

# கோவை: வனப்பகுதியில் தனியாக தவித்த குட்டி யானை கூட்டத்தோடு சேர்ந்தது



கோவை, ஜூன் 24

கோவை மாவட்டம் சிறுமுகை வனப்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பெத்திக்குட்டை பகுதியில் கூட்டத்தைவிட்டு பிரிந்த குட்டியானை ஒன்று தனியாக தவித்துக்கொண்டிருந்தது. உடனே அந்த குட்டி யானையை வனத்துறையினர் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது குட்டியானை தானாகவே வனப்பகுதிக்குள் செல்வதும், வெளியே வருவதுமாக இருந்தது. இந்தநிலையில் அந்த குட்டி யானை கூட்டத்தோடு சேர்ந்தது. இதனால் வனத்துறையினர் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் அவர்கள், குட்டியானையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# நீலகிரியில் அரசு பஸ்சை வழிமறித்த காட்டு யானை பயணிகள் அச்சம்



நீலகிரி, ஜூன் 24

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள மசினகுடி, சிங்காரா பகுதிகளை சுற்றி அடர்ந்த வனப்பகுதிகள் உள்ளது. தொடர் மழை காரணமாக வனப்பகுதி பசுமையாக காணப்படுவதால், குட்டிகளுடன் காட்டு யானைகள் மேய்ச்சலில் ஈடுபட்டு வருகின்றன. காலை மற்றும் மாலை நேரங்களில் சாலையோரம் வரும் காட்டு யானைகள் வாகனங்களை வழிமறித்து வருவதால், வாகன ஓட்டிகள் அச்சமடைந்து உள்ளனர். சில சமயங்களில் வாகன ஓட்டிகளை துரத்தி வருகிறது.

இந்தநிலையில் நேற்று சிங்காரா மின்வாரிய குடியிருப்பு பகுதியில் இருந்து பள்ளி மாணவர்களை மசினகுடிக்கு அழைத்து சென்ற மின்வாரிய பஸ், அந்த வழியாக வந்த ஜீப், கார் போன்ற வாகனங்களை காட்டு யானை வழிமறித்தது. இதனால் அச்சமடைந்த வாகன ஓட்டிகள் வாகனங்களை நிறுத்தினர். தொடர்ந்து அந்த யானை சாலையிலேயே நீண்ட தூரம் வழிவிடாமல் நடந்து சென்றது.

ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்ற காட்டு யானை, பின்னர் வனப்பகுதிக்குள் சென்றது. இதையடுத்து பள்ளி பஸ், பிற வாகனங்கள் மசினகுடிக்கு சென்றன.

இதனால் ½ மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அரசு பஸ்சை காட்டு யானை வழிமறித்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# பயணிகளை கையாண்டதில் திருச்சி விமான நிலையத்திற்கு முதலிடம்

திருச்சி, ஜூன் 24

திருச்சி விமான நிலையத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, சார்ஜா, துபாய், அபுதாபி, குவைத், பாங்காக், மஸ்கட், தோஹா உள்ளிட்ட வெளிநாட்டு நகரங்களுக்கு சர்வதேச பயணிகள் விமானங்களும், சென்னை, மதுரை, மும்பை, பெங்களூரு, ஐதராபாத் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்களுக்கு உள்நாட்டு விமான போக்குவரத்தும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக திருச்சி விமான நிலையம் அதிக அளவிலான பயணிகளை கையாண்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், துபாய், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு திருச்சி விமான நிலையத்தில் இருந்து அதிக அளவிலான பயணிகள் சென்று வந்துள்ளனர்.

மேலும் வளைகுடா நாடுகளுக்கு செல்லும் விமானங்களில் அதிக அளவிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் விடுமுறை நாட்களில் அதிகபட்சமாக சுமார் 6 ஆயிரம் பயணிகள் வரை கையாளப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருச்சி விமான நிலையம் தென் ஆசியாவிலேயே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

2025ம் ஆண்டு ஜனவரியில் புதிய உச்சத்தை எட்டிய திருச்சி விமான நிலையம் ஏப்ரலில் 1,17,072 சர்வதேச பயணிகளை கையாண்டுள்ளது.

இது கடந்த ஆண்டை விட 6.8 சதவீதம் அதிகரித்துள்ளது. இச்சாதனை திருச்சியின் உலகளாவிய இணைப்புமற்றும் பொருளாதார முக்கியத்துவம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை உறுப்பினர்களுக்கு மீன் விரலிகள் வழங்கும் திட்டம்



தேனி, ஜூன் 24

தேனி மாவட்டம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்வளர்ப்பு உள்ளீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், மாவட்ட மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை உறுப்பினர்களுக்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு மீன் விரலிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம், மீனவ விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதுடன் நிலையான மீன் வளர்ப்பினை தொடர்ந்து மேற்கொள்ளவும், சுய வேலைவாய்ப்பை உறுதி செய்திடவும் வழி வகுக்கும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்தில் ஒரு ஹெக்டர் மீன் பண்ணையில் 10,000 மீன்விரலிகள் இருப்பு செய்ய ரூ.5,000 மானியமாக வழங்கப்படுகிறது. தேனி மாவட்டத்திற்கு 5 ஹெக்டர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மீன் பண்ணை குட்டை அமைத்து மீன் வளர்ப்பு செய்யும் மீனவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடையலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வைகை அணை பார்க்ரோடு, பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம் என்ற முகரிக்கு நேரிலோ அல்லது அலுவலக தொலைபேசி எண். 04546291891, மீன்வள ஆய்வாளர் தொலைப்பேசி எண்.8778191094, 9487261528 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்கள்.



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சூரனூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்

# இன்றைய ராசி பலன்கள் (24.6.2025)

- **மேஷம்**: மன அமைதி அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் காணப்படும்.
- **ரிஷபம்**: தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். நண்பர்களிடம் ஆதரவு உண்டு.
- **மிதுனம்**: செயல்களில்நம்பிக்கைதேவை. அலட்சியமான அணுகுமுறை தவிர்க்கவும். வீண் வாதங்களில் ஈடுபட வேண்டாம்.
- **கடகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமான பலனளிக்கும். மன உறுதி தேவைப்படும் நாள்.
- **சிம்மம்**: உயர்ந்த பதவிக்காக போட்டி சூழல் உருவாகும். முக்கிய முடிவுகள் தள்ளிப் போகலாம். ஆரோக்கியத்தில் கவனம்.
- **கன்னி**: பணவரவுக்கு முயற்சி தேவை. பழைய கடன்கள் தொந்தரவு செய்யலாம். குடும்பத்தில் சிரமங்கள் எதிர்பார்க்கலாம்.
- **துலாம்**: தொழிலில் முன்னேற்றம். பணியில் உயர்வுக்கான வாய்ப்பு. குடும்பத்தில் சந்தோஷம் நிலவும்.
- **விருச்சிகம்**: பழைய பிரச்சனைகள் தீரும். மனநிம்மதி கிடைக்கும். பயணங்கள் சாதகமாகும்.
- **தனுசு**: முயற்சியில் தடைகள் வரலாம். திட்டங்கள் மாற்றம் பெறலாம். வெளிச்சொல் தவிர்க்கவும். பரிகாரம்: தக்காளி அன்னதானம் செய்யவும்.
- **மகரம்**: நற்பெயர் கூடும். சமூக ரீதியான வேலைகளில் ஈடுபாடு. உடல் நலத்தில் சிறிய ப்ரச்சனைகள்.
- **கும்பம்**: ஆவலுடன்செயல்படவேண்டிய நாள். திட்டங்களை கவனமாக செயல்படுத்துங்கள். உறவுகள் வழியில் நன்மை.
- **மீனம்**: புதிய தொடக்கங்களுக்கு நாள் உகந்தது. தொழிலில் வளர்ச்சி. வீண்செலவுகளைகட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கு: கலெக்டர் ஆய்வு



இராமநாதபுரம், ஜூன் 24

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை மாவட்ட க்லெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு வளாகத்தில் உள்ள இராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடனை, பரமக்குடி (தனி) ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறையினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் பாதுகாப்பு தன்மை குறித்து பார்வையிட்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண்மை வணிக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# திருமணத்தின் மீது எனக்கு ஆசையில்லை நடிகை சதா



'ஜெயம்' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் காலடி எடுத்து வைத்தவர் நடிகை சதா. அடுத்தடுத்து முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்து கவனம் ஈர்த்தார். தமிழ் தாண்டி மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளிலும் படங்கள் நடித்தார். 'உன்னாலே உன்னாலே' படத்துக்கு பிறகு, அவர் தமிழ் படங்களில் நடிப்பதை குறைத்து கொண்டார்.பின்னர்'டார்ச்லைட்'படத்தில்விலைமாதுவாகநடித்துஆச்சரியப்படுத்தினார்.

தற்போது முழுவதுமாகவே சினிமாவில் இருந்து ஒதுங்கிவிட்ட சதா, புகைப்பட கலைஞராக மாறிவிட்டார். காட்டுக்குள் சென்று பறவைகள் மற்றும் வனவிலங்குகளை புகைப்படம்எடுத்துவருகிறார்.41வயதாகும்சதாஇன்னும்திருமணம்செய்துகொள்ளாமல் இருக்கிறார். இதுபற்றி கேட்டால், "திருமணத்தின் மீது எனக்கு ஆசையில்லை. புகைப்பட துறையில் இன்னும் சாதிக்க வேண்டியுள்ளது. அதன்பிறகு பார்க்கலாம். காலம் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும். எதற்கு அவசரம்?" என்று கேட்கிறார்.

வெளிநாடுகள் சென்று அங்குள்ள அடர்ந்த வன பகுதிகளில் குழுவினருடன் சென்று புகைப்படம் எடுத்து வரும் சதா, தேடி வரும் சினிமா வாய்ப்புகளையும் நிராகரித்து வருவதாக கூறப்படுகிறது. 'ஏன் இப்படி ஆகிவிட்டார்?' என்று அனைவருமே சதாவை கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

# கிளப் உலகக் கோப்பை கால்பந்து: கடைசி நிமிட கோலால் இன்டர் மிலன் திரில் வெற்றி



கிளப் அணிகளுக்கான 21வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவின்பல்வேறுநகரங்களில்நடந்துவருகிறது. இதில்பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்2 இடங்களை பிடிக்கும் அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு முன்னேறும்.

இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 'இ' பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் இன்டர் மிலன் (இத்தாலி) 21 என்ற கோல் கணக்கில் உரவா ரெட் டைமண்ட்ஸ் கிளப்பை (ஜப்பான்) தோற்கடித்தது.

ஒரு கட்டத்தில் ஆட்டம் 11 என்ற கணக்கில் டிராவை நோக்கி நகர்ந்த நிலையில் கடைசி நிமிடத்தில் வாலென்டின் கார்போனி கோல் போட்டு இன்டர் மிலன் அணிக்கு முதலாவது வெற்றியை தேடித்தந்தார்.

இதே பிரிவில் ரிவர் பிளேட் (அர்ஜென்டினா) மோன்டெரி (மெக்சிகோ) இடையிலான ஆட்டம் கோல் இன்றி (00) டிராவில் முடிந்தது. 'எப்' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் போருசியா டார்ட்மண்ட் (ஜெர்மனி) 43 என்ற கோல் கணக்கில் மமலோடி சன்டவுன்சை (தென்ஆப்பிரிக்கா) வீழ்த்தியது.

மற்றொரு ஆட்டத்தில் புளுமினென்ஸ் (பிரேசில்) 42 என்ற கோல் கணக்கில் உல்சனை (தென் கொரியா) பந்தாடியது.

# தமிழ் படங்களில் ஆர்வம் காட்டும் திவ்யபாரதி ரசிகர்கள் மகிழ்ச்சி



'பேச்சுலர்' படத்தின் மூலம் ஒட்டுமொத்த இளைய தலைமுறையினர் மனதில் ஆணி அடித்தது போல பதிந்தவர், திவ்யபாரதி. விஜய் சேதுபதியின் 'மகாராஜா' படத்தில் தலைகாட்டி சென்றவர், மீண்டும் ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக 'கிங்ஸ்டன்' படத்தில் நடித்து கவர்ந்தார். நீளமான கூந்தல் கொண்ட கதாநாயகியாக வலம் வரும் திவ்யபாரதி, சமூக வலைதளங்களில் தனது கலக்கல் படங்களை அவ்வப்போது வெளியிட்டு இளசுகளை வசியம் செய்து வருகிறார்.

திவ்யபாரதி மீண்டும் தமிழ் படங்கள் நடிப்பது எப்போது? என ரசிகர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இதுகுறித்து சமூக வலைதளங்களிலும் அவருக்கு வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். இதற்கிடையில் தெலுங்கில் மும்முரமாக இருக்கும் திவ்யபாரதி, மீண்டும் தமிழ் சினிமாவில் ஆர்வம் காட்ட தொடங்கியிருப்பதாக கூறப்படுகிறது. புதிய கதைகளை கேட்டு வரும் அவர், 2 படங்களை ஒப்புக்கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இதன்மூலம் தமிழ் சினிமாவில் மீண்டும் அவர் தலைகாட்ட இருக்கிறார். இது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. 'கம்பேக் திவ்யா' என ரசிகர்கள் கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள்.

# டெஸ்ட் கிரிக்கெட்: 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 90/2



இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில்இந்தியாஇங்கிலாந்துஅணிகள்இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பீல்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. இந்திய அணி தரப்பில் ஜெய்ஸ்வால் (101 ரன்கள்), கில் (147 ரன்கள்) மற்றும் ரிஷப் பண்ட் (134 ரன்கள்) சதம் விளாசினர். இங்கிலாந்து அணி தரப்பில் கேப்டன்பென்ஸ்டோக்ஸ், ஜோஷ்டாங்குதலா4விக்கெட்சாய்த்தனர்.


இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கு 2வது நாள் முடிவில் 209 ரன்கள் எடுத்திருந்தது. ஆலி போப் 100 ரன்களுடனும் , ஹாரி புரூக் ரன் ஏதுமின்றியும் களத்தில் இருந்தனர். இந்தியா தரப்பில் பும்ரா மட்டுமே 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார். இந்த சூழலில் 3வது நாள் இன்று தொடங்கி நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஆலி போப்பின் விக்கெட்டை பறிகொடுத்தது. பிரசித் கிருஷ்ணாவின் பந்துவீச்சில் போப் 106 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பென் ஸ்டோக்ஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த மறுமுனையில் புரூக் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 52 பந்துகளை எதிர்கொண்ட ஸ்டோக்ஸ் 20 ரன்களில் சிராஜின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜேமி சுமித்தும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த இங்கிலாந்து அணி கம்பீரமாக முன்னிலையை நோக்கி பயணித்தது. இதனிடையே ஹாரி புரூக் அரைசதத்தை கடந்தார். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜேமி சுமித் 40 ரன்களில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் சதத்தை நோக்கி வெகுவாக முன்னேறிய ஹாரி புரூக் ஒரு ரன்னில் சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார். அவர் 99 ரன்களில் பிரசித் கிருஷ்ணாவின் பந்துவீச்சில் ஷர்துல் தாகூரிடம் கேட்ச் கொடுத்து சோகமாக வெளியேறினார். அடித்து ஜோடி சேர்ந்த கிறிஸ் வோக்ஸ் பிரைடன் கார்ஸ் கூட்டணியும் இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்டு ரன்கள் சேர்த்தது.

இதனால் இங்கிலாந்து அணி முன்னிலை பெறும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் இறுதி கட்டத்தில் பும்ரா மற்றும் சிராஜ் சிறப்பாக பந்துவீசி இங்கிலாந்து முன்னிலை பெறுவதை தடுத்தனர். பிரைடன் கார்ஸ் 22 ரன்களில் சிராஜின் பந்துவீச்சில் போல்டானார். சிறிது நேரத்திலேயே வோக்ஸ் (38 ரன்கள்) மற்றும் ஜோஷ் டங்கை (11 ரன்கள்) பும்ரா காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 100.4 ஓவர்களில் 465 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 ரன்கள் முன்னிலை பெற்றது. இந்தியா தரப்பில் அபாரமாக பந்து வீசிய பும்ரா 5 விக்கெட்டுகளும், பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்டுகளும், சிராஜ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணியில் ஜெய்ஸ்வால் 4 ரன்னில் கேட்ச் ஆகி அதிர்ச்சி அளித்தார். அவரைத்தொடர்ந்து களமிறங்கி ஓரளவு ரன்கள் சேர்த்த சாய் சுதர்ஷன் 30 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து கே.எல். ராகுலுடன் கேப்டன் சுப்மன் கில் ஜோடி சேர்ந்தார். இந்த சூழலில் 3ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 23.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 90 ரன்கள் எடுத்துள்ளது. இந்திய வீரர்கள் கே.எல். ராகுல் 47 ரன்களும், சுப்மன் கில் 6 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணியின் சார்பில் பிரைடன் கார்ஸ் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

தற்போது இந்திய அணி இங்கிலாந்து அணியை விட 96 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. நாளை 4ஆம் நாள் நடைபெறுகிறது.

# அறிவான் படத்தின் ஆகாய வெண்ணிலாவே பாடல் வெளியீடு




எம்டி பிக்சர்ஸ் வழங்கும் , துரை மகாதேவன் தயாரிப்பில், அருண் பிரசாத் இயக்கத்தில், ஆனந்த் நாக், ஜனனி நடிப்பில், மர்டர் மிஸ்டரி திரில்லராக உருவாகியுள்ள "அறிவான்" திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது.

ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரி, ஒரு என்கவுண்டரால் வேறு ஊருக்கு மாற்றலாகிறார். அங்கு அடுத்தடுத்து தொடர்ந்து 4 கொலைகள் நிகழ்கிறது. அந்த கொலைகளுக்குப் பின்னால் இருப்பது யார்? அந்த கொலைகளுக்கு காரணம் என்ன என்பதை அவர் கண்டுபிடிக்கிறாரா என்பதுதான் "அறிவான்" படத்தின் கதை.

ஒவ்வொரு நொடியும் மனதை அதிர வைக்கும் திருப்பங்களுடன், பரபரவென பறக்கும் திரைக்கதையில், ஒரு புதுமையான இன்வஸ்டிகேசன் திரில்லராக இப்படத்தை உருவாக்கியுள்ளார் இயக்குநர் அருண் பிரசாத். இப்படத்தில் இளம் நடிகர் ஆனந்த் நாக் போலீஸ் அதிகாரியாக முதன்மை வேடத்தில் நடிக்கிறார். பிக்பாஸ் புகழ் ஜனனி நாயகியாக நடித்துள்ளார். இவர்களுடன் மிக முக்கிய வேடங்களில் பாய்ஸ் ராஜன், பிர்லா போஸ், கௌளி சங்கர், சரத் ராஜ் ஆகியோர் இணைந்து நடித்துள்ளனர். இந்தத் திரைப்படத்தை எம் டி பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் துரை மகாதேவன் தயாரித்திருக்கிறார்.

'ஹிப் ஹாப் தமிழா' ஆதியிடம் பணியாற்றிய கார்த்திக் ராம் எரா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். விரைவில் படத்தை திரைக்குக் கொண்டுவரவும் படக்குழு திட்டமிட்டுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து படப்பிடிப்புக்கு பிந்தைய தொழில்நுட்ப பணிகள் விறுவிறுப்பாக தொடங்கி இறுதிக் கட்டத்தை எட்டி இருக்கிறது.

இந்நிலையில் இப்படத்தில் இடம்பெற்ற 'ஆகாய வெண்ணிலாவே..' எனத் தொடங்கும் பாடலும், பாடலுக்கான லிரிக்கல் வீடியோவும் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் பாடலின் தொடக்கத்தில் 'உன் விழிகளில் ஓராயிரம் கனா உன் பதில்களில் ஓராயிரம் வினா'' எனும் வரிகள் இடம் பிடித்திருக்கிறது இந்த வரிகள் காதலர்களுக்கு பிடித்த வரிகள் என்பதால் காதலித்துக் கொண்டிருக்கும் காதலர்களுக்கிடையே இந்த பாடல் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.